# சாராம்சம்


## *IMF (ச.நா.நி), உலக வங்கி, ADB (ஆ.அ.வ) இன் நோக்கம்*

# தனியார்மயமாக்கல்

## கொழும்பு துறைமுக எண்ணைக்கிடங்கு தனியார்மயமாக்கல்

*அமேசன் புத்தகங்கள் – **'IMF, World Bank & ADB Agenda on Privatisation – Vol. 3: Colombo Port Bunkering Privatisation – Annulled as Illegal & Fraudulent by Supreme Court'***

***http://www.consultants21.com/page-1-public-interest-litigations.php***




***அளவு - 8.25" X 11" – பக்கங்கள் 456***

*தனியார்மயமாக்கலினை மேம்படுத்துவதே சர்வதேச நாணய நிதியம் (IMF) உலக வங்கி (World Bank) ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) என்பனவற்றின் நோக்கமாக இருந்தது. திடுக்கிடும் வகையிலே இப்புத்தகமானது தெளிவாகவும் உண்மையாகவும் இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமான லங்கா மரைன் செர்விஸ் லிமிடெட் இனால் இயக்கப்பட்ட, இலங்கையில் கொழும்பு துறைமுகத்தில் காணப்பட்ட ஏகபோக தனியுரிமை கொண்ட எண்ணெய்க் கிடங்கின் மோசடியான தனியார்மயமாக்கல் குறித்து வெளிப்படுத்துகிறது.*

*நாட்டின் உச்ச நீதித்துறையான இலங்கை உச்ச நீதிமன்றமானது இத்தனியார்மயமாக்கலினை தவறானது, சட்டவிரோதமானது மற்றும் மோசடியானது என இரத்து செய்தது.*

*இவ்வழக்கிற்கு நூலாசிரியர் சகல ஆவணங்களையும் தயார் செய்து தனிப்பட்ட முறையில் இவ்விடயத்தில் பிரசன்னமானார், ஆனாலும் சில தொழில்நுட்ப கட்டாயத்தினிமித்தம், தனது நெருங்கிய நண்பரும் சட்டத்தரணியுமான வாசுதேவ நாணயக்காரவின் மூலம் உச்ச நீதிமன்றத்தில் மனுவினை தாக்கல் செய்தார். அக்காலப்பகுதியில் அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிற்கு ஆலோசகராகவுமிருந்தார். நூலாசிரியர் பொது நிறுவனங்களின் சீர்திருத்த ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் என்ற வகையில் அவரையும் பிரதிவாதிகளுள் ஒருவராக தன்னை பெயரிட்டிருந்தார்.*


වාසුදේව නානායක්කාර
ජනාධිපති උපදේශක කාර්යාලය
வாசுதேவ நாணயக்கார
ஜனாதிபதி ஆலோசகர் கரியாலயம்

**Public interest challenge in the Supreme Court**
**Re – Lanka Marine Services Ltd., (LMSL), the Colombo Port Bunkering Monopoly, Privatization**

**SC (FR) Application No. 209/2007**

This is to confirm that the above-styled Action was instituted by me at the earnest request of Mr. Nihal Sri Ameresekere, and all documentations were prepared by him and his Office, with advice from Lawyers.

Mr. Ameresekere named himself as a Respondent, and appeared in person making extensive written and oral submissions, and it his endeavours that resulted in the annulment as wrongful, unlawful, illegal and fraudulent of the privatization of Lanka Marine Services Ltd., the Colombo Port bunkering monopoly, which was re-vested in the State by the Supreme Court.

It is my very longstanding personal friendship Mr. Nihal Sri Ameresekere that I consented to be the Petitioner having absolute trust and faith in him in acting *bona-fide*.

Vasudeva Nanayakkara M.P.

49,1/1, විනයාලංකාර මාවත, කොළඹ - 10.
☎ 011-5874361 011-5863938

49,1/1, வினயாலங்கார வீதி, கொழும்பு - 10
☎ 011-5874361 011-5863938

நூலாசிரியர் பிரதிவாதிகளுள் ஒருவராக உச்ச நீதிமன்றத்தின் முன் பிரசன்னமாகி, தேவையான தரவுகள் மற்றும் தகவல்களை சேகரித்து, விரிவான அறிக்கைகளை வாய் மொழிமூலமாகவும், எழுத்து மூலமாகவும் சமர்ப்பித்து, பொது நலன் நோக்கிலும் நடவடிக்கை எடுக்கத்தக்க விதமாகவும் மேற் குறித்த தீர்ப்பினை உச்ச நீதிமன்றத்தின் மூலம் பெற்றுக்கொண்டார்.

ஜான் கீல்ஸ் நிறுவனம் மாத்திரமே, அரசாங்கத்தின் லங்கா மரைன் சர்வீசஸ் இன் பங்குகளை கொள்வனவு செய்வதற்கான "கேள்விப் பத்திரங்களை" முன்வைத்து அப்பங்குகளைக் கொள்வனவு செய்யும் சந்தர்பத்தினையும் பெற்றிருந்தமையால் அக்கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது
ஆதாரம் :

12th July 2002

**P15(a)**

Annex XI
LMS.

Mr. Susantha Ratnayake
Director
John Keells Holdings Limited
130, Glennie Street
Colombo 2

Dear Sir

Sale of 90 per cent shares of LMSL

Reference the Undertaking to Pay forwarded by you to purchase the above shares, in terms of the provisions contained in the relevant Request for Proposal document (RFP).

We are pleased to inform you that as per the provisions contained in the RFP, you have been qualified to bid. Since you are the sole qualified party, the bidding process that was envisaged is not warranted. As such it is proposed to conclude the transaction upon the payment of the purchase consideration by you excluding the amount that would be drawn down on your Undertaking to Pay and signing the relevant agreements by July 24th 2002. Please confirm receipt of this letter.

Yours faithfully

P.B. Jayasundera
Chairman

**John Keells Holdings** **P16**

John Keells Holdings Limited
P.O.Box 76, 130, Glennie Street, Colombo 2, Sri Lanka.
Telephone : 306000 (10 lines) 421101 (6 Lines) Fax : 447087, 439026
e-mail : jkh@keells.com Website : www.keells.com

Annex XI

79.3

July 12, 2002

Dr. P.B. Jayasundera
Chairman
Public Enterprise Reform Commission
Level 11, West Tower
World Trade Centre
Colombo 1.

Dear Sir,

SALE OF LANKA MARINE SERVICES (PVT) LTD (LMSL)

Thank you for your letter of award dated 12th July 2002, confirming that John Keells Holdings is the successful bidder for the above transaction.

We are willing to conclude the transaction as set out in your letter dated 12th July, 2002.

Thanking you,

Yours faithfully
JOHN KEELLS HOLDINGS LTD

Susantha Ratnayake
Director

PUBLIC ENTERPRISES REFORM COMMISSION OF SRI LANKA
15 JUL

குறிப்பாகவும் அதிர்ச்சியூட்டும் முறையிலும் ஐக்கிய நாடுகளின் உலக கூட்டு நிறுவங்களுள் (UN Global Compact company) ஒன்றான ஜான் கீல்ஸ் நிறுவனமானது இத்துறைமுக எண்ணெய்க்கிடங்கின் ஏகபோக உரிமையையும் களஞ்சிய வசதிகளையும் தவறான தனியார்மயமாக்கல் நடைமுறையில் பெற்றுக்கொண்டது, அத்தோடு இலங்கை முதலீட்டு சபையிடம் இதே போன்றதொரு புதிய எண்ணெய் களஞ்சிய கிடங்கினை அதே இடத்தில் அமைக்க வேண்டிய சலுகைகளையும் வசதிகளையும் வேண்டி விண்ணப்பித்திருந்தது. இதில் ஏற்கனவே காணப்படும் எண்ணெய் களஞ்சிய வசதியினை புதிய முதலீட்டின் மூலம் மேற்கொள்ளுவது போன்று லங்கா மரைன் சர்வீசஸ் லிமிடெட் இன் நடைமுறையிலுள்ள வசதிகளை குறிப்பிடாது இவ்விண்ணப்பத்தினை சமர்பித்திருந்தது - ஆதாரம் : இலங்கை முதலீட்டு சபையிடம் முன்வைத்த விண்ணப்பம்

1. Particulars of Collaborators — Proposed Equity Contribution (Rs. Mn. | %)

a). Name :- JOHN KEELLS HOLDINGS
Address :- NO. 130, GLENNIE STREET, COLOMBO 02
Citizenship :- SRI LANKA
National Identity Card/Passport No. :-
Name & Address of Banker :- BANK OF CEYLON, HATTON NATIONAL BANK, HSBC, NDB
Current Business Interests of Investor/s :- INFRA-STRUCTURE, PLANTATIONS, IT, LEISURE, TRANSPORTATION, F&B
Interests in other BOI Projects, if any :-

Project Proposal

2.1 a) New Project [x] (Tick as appropriate)
b) Expansion of Existing BOI Project [ ]
c) Expansion of Existing Non BOI Project [ ]

2.2 Summary of Proposed project
(Give brief description of the project

The primary objective of the project is to supply Heavy Fuel oil & Lubricants to the marine bunker market, whilst exploring the possibilities of supplying the power and similar sectors. This project will maintain the minimum requirement of 70% export income. If possible, the project envisages the purchase and expansion of an existing company in a smimilar business.

Proposed Financing (Rs. Mn.)

| | 2002 YEAR 1 1 ST HALF Foreign | 2002 YEAR 1 1 ST HALF Local | 2002 YEAR 1 2ND HALF Foreign | 2002 YEAR 1 2ND HALF Local | 2003 YEAR 2 1 ST HALF Foreign | 2003 YEAR 2 1 ST HALF Local | 2003 YEAR 2 2 ND HALF Foreign | 2003 YEAR 2 2 ND HALF Local |
|---|---|---|---|---|---|---|---|---|
| Share Capital | | | | 261.6 | | | | 102.8 |
| Loan Capital | | | | 1046.4 | | | | 411.2 |
| Others (Specify) | | | | | | | | |
| TOTAL INVESTMENT | | | | 1308.0 | | | | 514.0 |

We certify that the proposal constitutes a new project and does not involve the closure of an existing enterprise of a similar nature or the transfer of any assets from an existing enterprise in Sri Lanka.

Name & Designation: Mr. Susantha Ratnayake, Director
Signature of Investors
Date : 20/03/02

BOI SRI LANKA
BOARD OF INVESTMENT OF SRI LANKA


Location
1.1 Address of Location 69, WALLS LANE, COLOMBO 15
(Please attach a sketch) OPTION - FLOATING STORAGE /OTHER
1.2 Extent of Land required 8A 2R 21.4P
(in acres of/Sq.Mtrs)
1.3 Ownership of the land
1.4 Covered Space of Buildings
(in Sq.ft/Sq. Mtrs.) 300 - 2,500 sq. ft.
1.5 Whether it is an existing Building Yes

| ITEM | H.P | NO.OF ITEMS | CONDITION USED/NEW. |
|---|---|---|---|
| 1. Upgrading of existing tank forms | | 12 Tanks | 40 Years old |
| 2. New Tanks | | 3 Tanks | |

Name and designations: Mr. Susantha Ratnayake, Director
Signature of Investors:
Date: 20/03/02

*முரணான முறையில் முழுமையாக இலங்கை அரசாங்கத்தின் சொந்தமாக காணப்பட்ட லங்கா மரைன் சர்வீசஸ் நிறுவனம், கொழும்பு துறைமுகத்தின் எண்ணைக் களஞ்சிய கிடங்குகளில் ஏகபோக உரிமையினைக்கொண்டிருந்தபோதும் அதன் நடவடிக்கைகளின் இலாபத்தின் மீதான வருமான வரியினை இலங்கை அரசாங்கத்திற்கு செலுத்துவதன் மூலமே தொழிற்பட்டு வந்தது.*

*எப்படியிருந்தபோதும், அப்போது அமைச்சர் G.L.பீரிஸ் இந்த கீழ் இருந்த இலங்கை முதலீட்டு சபையானது, சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் இல. 1256/22 இணை அக்டோபர் 2002 இல், அதன் அப்போதைய நிர்வாகியும் தலைவருமாகிய அர்ஜுன மஹேந்திரனின் கட்டளையின் பேரில் வெளியிட்டிருந்தது. இவர் ஜான் கீல்ஸ் நிறுவனத்தினரோடு நாடகமாடி அதிர்ச்சியூட்டும் முறையில் அவர்கள் வெறுமனே தனியார்மயமாக்கலின்போது இலங்கை அரசாங்கத்திடமிருந்து லங்கா மரைன் செர்விஸ் நிறுவனத்தின் பங்குகளை கொள்வனவு செய்ததற்காக மேற்குறித்த இலங்கை முதலீட்டு சபையின் சலுகைகளையும் வசதிகளையும் அவர்களுக்குப் பெற்றுக் கொடுத்திருந்தார். மலைக்கத்தக்க விதத்தில் ஏற்கனவே வருமானத்திற்கான வரியினை இலங்கை அரசாங்கத்திற்கு செலுத்திக்கொண்டிருந்த நிறுவனத்திற்கு வரி விடுமுறையினையும் வழங்கியிருந்தார்*



The Gazette of the Democratic Socialist Republic of Sri Lanka

EXTRAORDINARY

අංක 1256/22 - 2002 ඔක්තෝබර් 01 වැනි අඟහරුවාදා — 2002.10.01

No. 1256/22 — TUESDAY, OCTOBER 01, 2002

(Published by Authority)

PART I : SECTION (I) — GENERAL

Government Notifications

L.D.-B 4/78 III

THE BOARD OF INVESTMENT OF SRI LANKA LAW No. 4 OF 1978

REGULATIONS made by the Minister of Enterprise Development, Industrial Policy, Investment Promotion and Constitutional Affairs under Section 24 of the Board of Investment of Sri Lanka Law, No. 4 of 1978.

G. L. PEIRIS,
Minister of Enterprise Development,
Industrial Policy, Investment Promotion and
Constitutional Affairs.

Colombo,
25th September, 2002.

Regulations

The Board of Investment of Sri Lanka Regulation, No. 1 of 2002 published in *Gazette Extraordinary* No. 1242/29 of 28th June, 2002 are hereby amended as follows : —

(*a*) In regulation 2 thereof, by the insertion, immediately after paragraph (ii) of that regulation, of the following new paragraph (iii) —

"(iii) that the provisions of the Inland Revenue Act, No. 38 of 2000 relating to the imposition, payment and recovery of income tax shall not apply to the profits and income for a period specified in column II below reckoned from the commencement of the commercial operation or production or from a date specified by the Board, of any existing or a new enterprise which is formed by the acquisition of assets of any existing enterprise to engage in the business relating to petroleum, power generation, transmission and development of highways, sea ports, air ports, railways, water services, public transport or any other infrastructure project approved by the Minister with an investment or additional investment of such value as specified in column I below, as the case may be within a period as may be determined by the Board.

| *Column I Additional/Investment (Rs. Mn.)* | *Column II Tax Exemption period (No. of years)* |
| --- | --- |
| 1,250-2,499 | 05 |
| 2,500-4,999 | 08 |
| Above 5,000 | 10 |

*இவ்வாறான சூழ்நிலையில், இதுவும் உச்ச நீதிமன்றத்தினாலே மோசடி என்று தீர்க்கப்பட்டு செலுத்தப்படாத காலப்பகுதிக்கான வருமான வாரியானது அரசுக்கு செலுத்தப்படவேண்டுமென்றும், இலங்கை முதலீட்டு சபையின் வரி விடுமுறை அனுமதியினையும் இரத்து செய்தது*

*இவ் உச்ச நீதிமன்ற நடவடிக்கைகளின் பொது அதிர்ச்சிகரமான வெளிப்பட்டது யாதெனில், இடையீட்டு மனுதாரராக ஸ்ரீலங்கா ஷிப்பிங் கம்பெனி லிமிடெட் என்ற பிறிதொரு நிறுவனம் இவ் உச்ச நீதிமன்ற வழக்கில் தலையிட்டமையே. இவ் இடையீட்டு மனுதாரர் தாமும் லங்கா மரைன் சர்வீசஸ் நிறுவனத்தின் பங்குகளைக் கொள்வனவு செய்ய கேள்விப்பத்திர அனுமதிக்காக விண்ணப்பித்த போதும் ஜான் கீல்ஸ் நிறுவனத்திற்கே கேள்விப்பத்திரம் முன்வைக்கும் அனுமதி கிடைத்தமையானது அவர்கள் சர்வதேச அளவில் பிரசித்திபெற்ற* Fuel & Marine Marketing LLC *யுடன் கூட்டிணைந்து செயற்பட்டமையே. இருப்பினும் அதிர்ச்சியூட்டும் வகையில் ஜான் கீல்ஸ் நிறுவனமானது கேள்விப்பத்திர தாக்கல் செய்யும் தகுதி பெற்றதன் பின்னர் அது அச்செயற்பாட்டில் ஈடுபட்டது மேற்கூறப்பட்ட* Fuel & Marine Marketing LLC *இந்த கூட்டிணைப்பு இல்லாமலேயே ஆகும்* !

*இலங்கை அரசாங்கத்தின் கொள்கையானது எண்ணைக் கிடங்கு வர்த்தகத்தினை தாராளமயமாக்குதலே - ஆதாரம் :*

Sunday Observer 28th October, 2001

**EXPRESSIONS OF INTEREST**

## LIBERALISATION OF BUNKERING

The Public Enterprises Reform Commission (PERC), on behalf of the Government of Sri Lanka invites proposals from private sector operators to participate in the marine fuel market in Sri Lanka. Successful applicants will be permitted to import and distribute marine fuel within the territorial waters of Sri Lanka including the ports.

Sri Lanka's strategic positioning in the Eastern Naval Route and its close proximity to the Indian subcontinent offers considerable potential for the development of bunkering which is presently a State monopoly.

There will be no restriction in the number of licenses issued. However licenses will only be issued to limited liability companies that meet with predetermined requirements with regard to bunker vessels.

Interested parties are requested to collect a Request for Proposal (RFP) from PERC which sets out the selection process and specimen application forms.

The RFP may also be downloaded from the PERC website at www.perc.gov.lk

Public Enterprises Reform Commission
Level 11, West Tower
World Trade Center
Colombo 1.
Tele: 94-1-346831-4 Fax: 94-1-326116

P E R C

இருப்பினும் இடையீட்டு மனுதாரரான இலங்கை ஷிப்பிங் கம்பெனி லிமிடெட். ஆனது தொழில்நுட்ப மதிப்பீடு குழுவினால் நிராகரிக்கப்பட்டமைக்கு, அவர்கள் 8 வருட ஏக போக உரிமையினை கோரியிருந்தமையே காரணமாகும். இருப்பினும் அதிர்ச்சிகரமாக ஜான் கீல்ஸ் நிறுவனத்திடம் லங்கா மரைன் சர்வீசஸ் இந்த பங்குகள் விற்பனை செய்யப்பட்ட கடைசி படிமுறைகளின் போது, கொள்வனவு மற்றும் விற்பனை ஒப்பந்தத்திலே சூட்சுமமாக லங்கா மரைன் சர்வீசஸ் நிறுவனத்திற்கு நிரந்தர ஏகபோக உரிமையினை வழங்கும் நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருந்தது

முழுமையாக அரசாங்கத்திற்கு சொந்தமான லங்கா மரைன் சர்வீசஸ் நிறுவனத்தின் பங்குகளை கொள்வனவு செய்யும் முகமாக 1,200 மில்லியன் ரூபாய்களை ஜான் கீல்ஸ் நிறுவனம் செலுத்தியிருந்தது. இதனைத் தொடர்ந்து லங்கா மரைன் சர்வீசஸ் நிறுவனத்தின் நிகர இலாபமானது பின்வருமாறு தெரியப்படுத்தப்பட்டது - ஆதாரம் :

| | ரூபாய் |
|---|---|
| நிதியாண்டு *2002 /03* | *402,733* |
| நிதியாண்டு *2003/04* | *235,876* |
| நிதியாண்டு *2004/05* | *574,062* |
| நிதியாண்டு *2005/06* | *1,089,393* |

மேற்குறிப்பிட்ட ஜான் கீல்ஸ் நிறுவனத்தின் நிகர இலாபமானது லங்கா மரைன் சர்வீசஸ் நிறுவனத்தின் யாதேனும் செலவுகளையும் கட்டணங்களையும் மீளப்பெற்றுக்கொண்டதன் பின்பதாக இல்லையா.

மேலும் இவ் எண்ணெய் களஞ்சிய ஏகபோக வசதியானது பிரசித்திபெற்ற வங்கியான DFCC வங்கியினால் புதிரானதும் கேள்விக்குரிய முறையிலும் விலை மதிப்பு செய்யப்பட்டபோதும் 8 1/2 ஏக்கர் அளவிலான இக் கொழும்பு துறைமுக நிலப்பரப்பானது இதைக்காட்டிலும் அதிக விலைமதிப்புள்ளதாயிருந்தது. 30.06.2016 இன் படி இதன் சந்தைப்பெறுமதி 15,000 மில்லியன் ரூபாய்களாக இருந்திருக்கும். இதற்கு மேலதிகமாக களஞ்சிய பெறுமதி, எண்ணெய்க் குழாயின் உட்கட்டமைப்பின் பெறுமதி மற்றும் ஏகபோக உரிமையுள்ள வியாபாரம் என்பன இவ்வங்கியின் விலை மதிப்பீட்டில் கவனத்தில் கொள்ளப்படவில்லை

5th October, 2004

Mr. Dayantha De Mel
Executive Vice President
DFCC Bank
73/5, Galle Road,
Colombo 03

Dear Sir,

**LMSL VALUATION DATED 10 JUNE, 2002**

I refer to the above business valuation done by DFCC Bank at the request of PERC.

For the purpose of regularizing the land transfer to LMSL, we require confirmation from you whether the value of the land on which LMSL operations were carried out at Bloemendhal Road (approximately 8 Acres) was incorporated into the said valuation and if so, the value and the basis of the value attached to that land.

Thanking you for an early response.

Yours faithfully,

Chandu Epitawala
Director

15
DFCC B/
P O Box 1397
73/5 Galle Road Colombo 03
SRI LANKA
Tel +94-11-2442442
Fax +94-11-2440376
E-mail info@dfccbank.com
Web www.dfccbank.com
DFCC BANK

Mr. Chandu Epitawala
Director
Public Enterprises Reform Commission of Sri-Lanka
11-01, West Tower
World Trade Centre
Echelon Square
Colombo 01

October 12th 2004

Dear Sir,

Valuation of Lanka Marine Services Limited (LMSL)

We refer to your letter of October 5th, 2004 regarding the above assignment undertaken by DFCC Bank for the Public Enterprises Reform Commission in June 2002.

As indicated in our report, the LMSL valuation was carried out on the basis that the company's value was represented by future earnings; in other words that it was a going concern. Accordingly the methodology employed was the discount of future cash flows. These cash flows were projected forward over 15 years and at the end of this period a terminal value for the business was computed. In computing this terminal value, it was assumed, along with other factors, that by the end of the 15-year period, LMSL would have acquired freehold title to the Bloemendhal property following its transfer from the Ceylon Petroleum Corporation. As such, the value of the company would also include the future value of this property

Following consultation with valuers, the value of the land (at the valuation date) was placed at Rs. 150,000/- per perch and it was assumed that this value would appreciate by a factor of 9% per annum (based on inflation) over the 15-year period of the valuation. On this basis, the projected value of the property was estimated at approximately Rs. 699 million at the end of year 15. This figure has accordingly been incorporated into the valuation as a component of the terminal value of the company. This has then been aggregated with the future operational cash flows and discounted to arrive at the present value of the business enterprise.

We trust this provides the clarification sought.

Yours truly

Dayantha De Mel
Executive Vice President (Corporate Finance)


*அதிர்ச்சியூட்டும் விதமாக இவ் 8 1/2 ஏக்கர் கொழும்பு துறைமுக நிலமானது மோசடியான முறையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அவரது கையொப்பமிடப்பட்டும் குடியரசின் உத்தியோகபூர்வ முத்திரையினை பதித்தும் காணப்பட்ட உறுதிப்பத்திரத்தின் மூலம் பரிமாறப்பட்டிருந்தது. பின்பதாக இதில் திகைக்கும்வகையில் வெளிப்பட்டது யாதெனில் ரூபாய் 1,199,362,500/- இனை இலங்கையின் திறைசேரியானது இந்நிலப்பரப்பிற்காக பெற்றுக்கொண்டதாக இவ் உறுதிப்பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டபோதும்*


1198

01 FEB 2005

( 1,199,362,500.00 )

*பின்பதாக பொது நிறுவனங்களின் பாராளுமன்றக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது, இவ்வாறானதொரு தொகையினைப் பெறவில்லை என்பதனை ஒப்புக்கொண்டது.*


PERC

PUBLIC ISES REFORM COMMISSION OF SRI LANKA

ANNEX 38

March 21, 2006

Dr P.B. Jayasundera
Secretary to the Treasury
General Treasury
The Secretariat
Colombo 1.

Dear Sir,

Transfer of Land at No 69, Wall's Street, Colombo 15


As per our records, the subject Land was purchased by Lanka Marine Services (Pvt) Ltd on 19.1.2005 for a sum of Rs 1,199,362,500/= (Rupees One Billion, One Hundred & Ninety Nine Million, Three Hundred & Sixty Two Thousand, Five Hundred).

Please confirm whether the Government received the above consideration as stated in the attached documents.

Yours faithfully,

W M Bandusena
Chairman.

Attachments a/s


PE/D(I)/Marine/02

23.08.2006

ANNEX 39

Chairman,
Public Enterprises Reform Commission.

Transfer of Land at No. 69 , Wall's Street, Colombo 15.

This refers to the your letter dated 21.03.2006 on the above subject.

Director General, Department of Treasury Operation has confirmed that they have not received any money on this regard.

K.P. Indran
Director
For Director General

*மேலும் இந்நிலப்பரப்பானது இலங்கை துறைமுக அதிகார சபையிற்கு சொந்தமாக காணப்பட்டது அத்தோடு இலங்கை துறைமுக அதிகாரசபையினை உருவாக்கும் பாராளுமன்றத்தின் சட்டமூலத்தின் பிரகாரம் அதன் நிலப்பரப்பினை தனியாக பிரிக்கவோ விற்பனை செய்யவோ அதிகாரமளிக்கப்படவில்லை*

உச்ச நீதிமன்றத்தின் முன் இவ்வழக்கு கொண்டுவரப்படமுன் பொது நிறுவனங்களின் பாராளுமன்றக் குழுவானது பொதுக்கணக்காய்வாளர் நாயகத்தினால், பொது நிறுவனங்களின் சீர்திருத்த ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரான நூலாசிரியரின் உதவியுடன் தயார் செய்யப்பட்ட ஆய்வுரீதியான அறிக்கையில் இத் தனியார்மயமாக்கல் பரிமாற்றத்தினை பார்த்தமாத்திரத்தில் சட்டவிரோதமென புலப்படும் மோசடியானதுமான பரிவர்த்தனை என கண்டித்துள்ளார். அத்தோடு பின்வரும் அறிக்கையினை இலங்கை பாராளுமன்றத்தில் சமர்பித்திருந்தார்

**"(LMSL) லங்கா மரைன் சர்வீசஸ் லிமிடெட் இன் 90% பங்குகளின் விற்பனை**

1. *17.8.2000 இல் அமைச்சரவை எண்ணைக்கிடங்கு வியாபாரத்தினை பின்வரும் விதத்தில் தாராளமயமாக்க தீர்மானித்தது.*

- கிடங்கு பகுதியினை தாராளமயமாக்கி குறிப்பிட்ட அளவு தரப்பினரை கிடங்கு சேவைகளை நடைமுறைப்படுத்த அனுமதித்தல்.
- *LMSL* இற்கு வழங்கப்பட்டுள்ள ஏகபோக உரிமையானது ஒரு வருடத்திற்கு மட்டுப்படுத்தப்படவும் இக்கலப்பகுதிக்குள் *LMSL* இணை தனியார்மயமாக்கல்.
- கிடங்குகளை விற்பனை செய்யும் முகமாக கிடங்கு பகுதிக்கு கொழும்பு துறைமுகத்திற்கு அண்மித்த பகுதிகள் உள்ளடங்கலாகபுதிய வரவுகளை இலங்கையின் நீர் எல்லைக்குள் உள்வாங்குதல்
- பொது நிறுவனங்களின் சீர்திருத்த ஆணைக்குழுவானது திறந்த முறையிலான டெண்டர் நடைமுறைகளை முதலீட்டாளர்களிடம் எதிர்பார்த்தது. பொ.நி.சீ.ஆ.கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக அமைச்சரவைக்கு தனது சிபாரிசினை வழங்கியிருந்தது.
- இதனை நடைமுறைப்படுத்துவதனை எளிதாக்க அரசாங்கமானது பெட்ரோலிய உற்பத்திச் சட்டம் *2002* இன் இல.*33.* இனை இயற்றியது (சிறப்பு வழங்குதல்களுடன்)

2. *28.10.2001* இல் பொ.நி.சீ.ஆ.எண்ணைக்கிடங்கு அனுமதிப்பத்திரத்தினை வழங்கும் பொருட்டு ஆர்வமுள்ளவர்களின் வெளிப்பாட்டு அறிக்கையினை *(EOI)* கோரியிருந்தது. அத்துடன் *8.11.2002* இல் *LMSL* இன் *90 %* பங்குகளை விற்பனை செய்யும் பொருட்டும் *28.02.2002* இனை அனுமதிகளுக்கான முடிவுத்திகதி என அறிவித்து வெறுமனே *3* கிழமைகள் அவகாசத்தில் *(EOI)* இணை கோரியிருந்தது

3. *28.02.2002* இல் பொ.நி.சீ.ஆ, இன் தலைவர் *P.B.*ஜயசுந்தர திறைசேரியின் செயலாளர் சரிதா ரத்வத்தவிற்கு *EOI* களையும் இறுதி கேள்விப்பத்திரங்களையும் ஆராயும்படியான டெண்டர் ஆராய்வு குழுவினை நியமிக்கும்படி பணித்திருந்தார். அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட டெண்டர் குழுவொன்று காணப்படவில்லை. *28.02.2002* இற்கு பின்பதாக இவ் டெண்டர் தேர்வு குழுவானது அமைக்கப்பட்டதனிமித்தம் *EOI* இற்கான அழைப்பும் ஏனைய உரிய ஆவணங்களும் இக்குழுவினால் அனுமதிக்கப்படவில்லை

4. *30.04.2002* இல் கேள்விப்பத்திர முற் கூட்டத்தொடரிலே பொ.நி.சீ.ஆ.இன் தலைவர் *P.B.*ஜயசுந்தர பின்வருமாறு உறுதிப்படுத்தினார். *LMSL* ஆனது அதன் விற்பனையின் பின் இறக்குமதி மற்றும் எண்ணைக்கிடங்கு விற்பனை என்பனவற்றில் ஏகபோக உரிமையினை கொண்டிருக்காது

- அரசாங்கம் நீதிமன்றத்தில் வழக்குகளை எடுத்துக்கொள்ள முடியாது
- நிலம் - முடிவுத்திகதியிலிருந்து ஒருவருட காலப்பகுதிக்குள்*LMSL* இனால் செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவு உற்பட பரிவர்த்தனையில் நிபந்தனைகள் அனைத்தும் செலுத்தப்பட்டிருப்பதை பொ.நி.சீ.ஆ.ஆனது மே *7,2002* இன்படி அறிவித்தல் வேண்டும்

5. *RFP (* பின்வருமாறு தெரிவித்திருந்தது

- இலங்கை துறைமுக அதிகாரசபை டொல்பின் இறங்குதுறைக்கும் புளுமெண்டோல் வரையிலான குழாய் பொறுத்துதலுக்கும் மெட்ரிக் டன் ஒன்றிற்கு அமெரிக்க டொலர் *10* எனும் வீதத்தில் வாடகையினை தெரியப்படுத்தியிருந்தது
- இலங்கை துறைமுக அதிகாரசபை தென் படகு இரங்குதுறையொன்றினை பொது பயன்பாட்டிற்காக நிர்மாணிக்க முன்மொழிந்தது,இதற்கான காரியாலய பரப்பின் சதுர அடி ஒன்றிற்கு *3* அமெரிக்க டாலர் எனும் வீதத்தில் கட்டணம் ஒன்றினையும் அறிவித்திருந்தது.
- விலை கேட்போர் சுயாதீனமாக ஆய்வுசெய்தல் வேண்டும் அத்தோடு அதற்கு தனியாக அவர்களே பொறுப்புக்கூறல் வேண்டும் .......விலை கேட்போர் விடாமுயற்சியுடனும் சிரத்தையுடனும் நடந்துகொள்ள வேண்டும் அவர்களது நடத்தைகளை அவர்களே தனியாக பொறுப்பாளிகளாக இருப்பர். எழுத்து மூலமாகவோ வாய்மொழி மூலமாகவோ வழங்கப்படும் தகவல்கள் விலை கேட்போரை சட்ட ரீதியாக பிணைக்காது
- பொ.நி.சீ.ஆ. வின் தலைவர் *P.B.*ஜயசுந்தர *LMSL* இன் தலைமை மதிப்பீட்டாளரிடம் *1993* இல் *LMSL* இந்த மேம்படுத்தப்பட்ட மதிப்பீட்டினை கோரியிருந்தார். இதற்கு 'சொத்துக்களின் மதிப்பீடு' நிறைவுற்றதையும் 'வியாபாரத்தின் மதிப்பீட்டினை' தொடங்கவிருப்பதாகவும் தெரிவித்திருந்தார்

| | |
|---|---|
| 7. கேள்விக்குரிய முறையில் பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டினை புறம்தள்ளி பொ.நி.சீ.ஆ இனால் 'வியாபாரத்தின் பெறுமதியினை'கணிக்கும்படி வேறு போட்டியாளர்கள் எதிர்பார்க்கப்படாத நிலையில் DFCC வங்கி தெரிவுசெய்யப்பட்டது. LMSL இடம் அதன் ஏகபோக உரிமை காணப்படாது என்ற அடிப்படையில் DFCC வங்கியானது 'வியாபாரத்தின் மதிப்பாக 1,200,000,000/- ரூபாயினை தலைப்பெருமாதியாக முன்வைத்திருந்தது. எனினும் இம்மதிப்பீடும் தவறானதே<br>DFCC வங்கியானது LMSL இன் நிகர சொத்துக்களை கணக்கிலெடுக்க தவறியிருந்தது குறிப்பாக 8 ஏக்கர் 2 ராட் 21.44 பெர்ச்சஸ் அளவிலான புளூமெண்டல் காணியினை தவறவிட்டிருந்தது, இதனை பிரதான மதிப்பீட்டாளர் பூரணப்படுத்தப்பட்டதாக உறுதிப்படுத்தியிருந்தபோதும் பொ.நி.சீ.ஆ இதனை கேள்விக்குரிய முறையில் தவறவிட்டிருந்தது. 1993 இல் பிரதான மதிப்பீட்டாளர் இதன் பெறுமதி 82,866,000/- என மதிப்பிட்டிருந்தார்<br><br>சாதாரணமாக நடைமுறையிலுள்ள ஓர் வர்த்தகத்தினை மதிப்பிடும் போது பொதுச்சொத்துக்களின் மதிப்பீடும் வியாபாரத்தின் மதிப்பீடுமாக இரண்டும் கணக்கிலெடுக்கப்படும்<br><br>8. (TEC) டெண்டர் மதிப்பீட்டு குழுவின் பரிந்துரைகளின்படி LMSL இன் 90% பங்குகளை தள பெறுமதியான 1,200,000,000/- இற்கு விற்பனை செய்ய 21.06.2002 இல் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் கரு ஜயசூரிய அமைச்சரவையில் குறிப்பாணை ஒன்றினை சமர்ப்பித்தார் (நிகர சொத்து மதிப்பீட்டில் குறிப்பாக நிலப்பெறுமதி கணக்கில் கொள்ளப்படவில்லை ) கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் கேள்விப்பத்திர நடைமுறைகளின்போது பின்வரு அமைச்சரவை அனுமதிகள் கோரப்பட்டன.<br><br>• LMSL இன் 90% பங்குகளை இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம் அடையாளம் காணப்பட்ட நடைமுறையிலும் பங்கு விற்பனை மற்றும் கொள்வனவு ஒப்பந்தத்திற்கு அமையவும் விற்பனை செய்ய அதிகாரமளித்து நிபந்தனைகளுக்கு உட்பட்ட முறையிலும் வெற்றிகரமாக தெரிந்துகொள்ளப்பட்ட கேள்விப்பத்திரம் முன்வைத்தவருக்கு மிகுதி 10% பங்குகளை தெரிந்துகொள்ளப்பட்ட LMSL ஊழியரிடம் பரிசாக வழங்கப்படல்<br><br>• LMSL இன் 90 % பங்குகளை 1,200,000,000/- எனும் தள பெறுமதிக்கு விற்பனை செய்வதனை அனுமதித்தல் வேண்டும் இது கொழும்பு பங்குப பரிவர்த்தனையில் கேள்வி பாத்திரங்களை முன்வைப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட வேண்டும் | • திறைசேரியின் செயலாளர் இலங்கை பெட்ரோலியக்கூட்டுத்தாபனத்தின் செயலாளர், துறைமுக அதிகாரசபை என்பனவற்றின் செயலாளர்களை பங்கு கொள்வனவு மற்றும் விற்பனை ஒப்பந்தங்கள், பொது பயன்பாட்டு வசதிகள் ஒப்பந்தம் மற்றும் ஏனைய துணை ஒப்பந்தங்களை மேற்கொள்ள அனுமதியளித்தல்<br>• இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடன் இணைந்து துறைமுக அதிகாரசபைக்கு பொது பயன்பாட்டு வசதிகளை பெற்றுக்கொள்ளவும் முகாமை செய்யவும் முன்மொழியப்பட்ட கம்பெனி உருவாகும்வரை அனுமதியளித்தல்<br>• LMSL இன் 90% பங்குகள் விற்பனையின்மூலம் பொது பிரயோக வசதியினை பல் -பிரயோகமாக மேம்படுத்துவதற்கு வேண்டிய நிதியினை ஒதுக்கீடு செய்யவும் இதனை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனமோ அல்லது வேறு தரப்போ மேட்கொள்ள அனுமதி அளித்தல் 21.06.2002 இன் அமைச்சரவை அறிக்கையானது புளுமெண்டல் வீதியின் 8 ஏக்கர் 2 ராட் 21.44 பெர்ச்சஸ் பரப்பிலான அரசு காணியின் சந்தைப்பெறுமதியினை வெளிப்படுத்தவில்லை<br>9. இவ் 21.06.2002 இன் அமைச்சரவை அறிக்கைக்கான அமைச்சரவை அனுமதி 14.08.2002 இலே வழங்கப்பட்டு 21.08.2002 இலே உறுதிப்படுத்தப்பட்டு அறிவிக்கப்பட்டது. இதனால் 21.06.2002 இற்கும் 21.08.2002 இற்கும் இடையிலான காலப்பகுதியில் இவ்விடயம் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை<br>10. 21.08.2002 இன் அமைச்சரவை அறிக்கையின் உறுதிப்படுத்தலுக்கு முன்பதாக பொது நிறுவனங்களின் சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைவர் P.B.ஜயசுந்தர ;<br>a. 12,07.2002 இல் ஜான் கீல்ஸ் நிறுவனத்தின் கடிதங்களுக்கு பதிலாக LMSL இன் 90% பங்குகளை அவர்களுக்கு விற்பனை செய்தமைக்காக "வெகுமதிகளை" வழங்கியிருந்தார்<br>b. இவ் "வெகுமதியானது " ஜான் கீல்ஸ் நிறுவனம் மாத்திரமே தலைப்பெருமாதியான 1,200,000,000/- இற்கு 10% கேள்விப்பத்திர முறையினை சமர்ப்பித்தது என்ற அடிப்படையிலேயே வழங்கப்பட்டது. 10.07.2002 இல் சமர்ப்பிக்கும்படி வேண்டிக்கொள்ளப்பட்ட 25.06.2002 இன் கடிதத்தின்படி இது. "விதிமீறிய" விளையாட்டு என ஏனைய கேள்விப்பத்திரதாரர்களால் குற்றஞ்சாட்டப்பட்டது |

| | |
|---|---|
| | 02.08.2003 இல் ஜான் கீல்ஸ் நிறுவனத்தின் கடிதத்திற்கு பதிலாக கடிதத்தில் பொ.நி.சீ.ஆ.இன் தலைவர் P.B.ஜயசுந்தர LMSL இன் 90% பங்குகளை ஜான் கீல்ஸ் கொள்வனவு செய்ததின் பின்னர் அதன் ஏகபோக தனி உரிமையினை வழங்குவதற்காக ஒப்புதல் அளித்திருந்தார். ஏற்கனவே டெண்டர் தேர்வு குழுவானது ஸ்ரீலங்கா ஷிப்பிங் கம்பெனி இன் கேள்விப்பத்திரத்தினை அவர்கள் LMSL இணை 8 வருட ஏகபோக தனியுரிமையினை கோரியிருந்த காரணத்தினாலேயே நிராகரித்தனர்.<br><br>. |

20.08.2002 இல் பொ.நி.சீ.ஆ இன் தலைவர் P.B.ஜயசுந்தர, திறைசேரியின் செயலாளர் சரிதா ரத்வத்த பொ.நி.சீ.ஆ இன் சட்ட விவகார தலைவர் சாமலி குணவர்த்தன என்போர் ஜான் கீல்ஸ் நிறுவனத்துடன் பங்கு விற்பனை மற்றும் கொள்வனவு ஒப்பந்தம் மற்றும் CUF ஒப்பந்தம் என்பனவற்றில் கைச்சாத்திட்டிருந்தனர். இவ் CUF ஒப்பந்தம் பின்வரும் புதிய சரத்தினை (8.2) கொண்டிருந்தது. இது இதற்கு முன் காணப்படவில்லை

"8.2 GOSL /SLPA/CPC என்பன கொழும்பு துறைமுகத்தினுள் சகல எண்ணெய் கிடங்கு / கடல் சார் எண்ணெயினை கையாள்பவர் மற்றும் நகர்த்துவோர் CUF இணை பயன்படுத்துவதன் மூலமே அவ்வாறு செய்வதனை உறுதிப்படுத்தல் வேண்டும். மேட்குறித்த சட்ட மூலமானது 21.08.2002 இந்த அமைச்சரவை உறுதிப்படுத்தலுக்கும், அறிவித்தலுக்கும் முன்பதாகவே இணைக்கப்பட்டது எனவே இது சட்டத்தின் முன் தவறானதாகவும், செல்லுபடியற்றதாகவும் காணப்படும்

11. *2002 பெட்ரோலிய உற்பத்திகள் சட்டம் இல 33 (சிறப்பு விதிகள்) இல் மேற்கூறப்பட்ட ஏகபோக சரத்து இணைக்கப்பட்டமையானது பாதகமானது என மேல் முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்திருந்தது.*

12. *இதனைத் தொடர்ந்து மேற்குறித்த ஏகபோக உரிமை சட்டமூலம் தொடர்பில் எதிர்கொள்ளப்பட்ட DFCC வங்கி LMSL இன் ரூபாய் 1,200,000,000/- "வர்த்தகத்தின் மதிப்பீட்டிலிருந்து" விலகிக்கொண்டது. அத்தோடு ஏகபோக உரிமையின் அடிப்படையில் "வர்த்தகத்தின் மதிப்பீடு ரூபாய் 2,400,000,000/- என எழுத்துமூலமாக உறுதிப்படுத்தியதுடன் தாம் "நிகர பெறுமதியினை" மதிப்பீடு செய்ய கோரப்பட்டிருந்தால் 8 A , 2R, 21.44 p இற்காக தொழில்சார் சொத்து கணிப்பீட்டாளர் ஒருவரின் சேவையினை தாம் பெற்றிருப்பர் எனவும் தெரிவித்திருந்தனர்*

*13. 2004 இன் மத்திய வங்கியின் ஆண்டறிக்கை பின்வருமாறு தெரிவிக்கிறது;*

*" எண்ணெய் கிடங்குகளில் அதிக செலவானது எண்ணெய் சேகரிப்பிற்காக கொழும்பிற்கு கொண்டுவரப்படும் கொள்கலன்களில் வருகையினை குறைக்கின்றது. LMSL இந்த தனியார்மயமாக்கலானது எதிர்பார்த்த அளவு குறைந்த விலையினையோ தொழில்சார் போட்டியினையோ ஈட்டவில்லை. இது இத்துறையில் மேலும் திருத்தங்கள் தேவை என்பதனை வெளிப்படுத்துகிறது*

*14. RFP இல் LMSL பின்வரும் விடயம் தொடர்பாக தலையிடுவதில்லை என இலங்கை அரசு தெரிவித்திருந்ததை பொ.நி.சீ.ஆ. இன் தலைவர் P.B.ஜயசுந்தர கேள்விப்பத்திர முற் கூட்டத்தில் உறுதிப்படுத்திய போதும், ஜான் கீல்ஸ் நிறுவனத்துடன் கைச்சாத்திட்ட பங்கு விற்பனை மற்றும் கொள்வனவு ஒப்பந்தத்தில் சிங்கப்பூரின் ஒஸ்போர்ட் ஜே இன்டர்நேஷனல் நிறுவனத்தின் 9.2 மில்லியன் அமெரிக்க டொலர் உரிமை கோரிக்கையினை அரசாங்கம் ஏற்றுக்கொண்டு முற்பணமாக அமெரிக்க டொலர் 170,000/- இணை செலுத்தியிருந்தது*

*15. RFP உடன் வெளியிடப்பட்ட பங்கு விற்பனை மற்றும் கொள்வனவு ஒப்பந்த வரைபில் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.*

*" முடிவுத்திகதியிலிருந்து ஒருவருட காலப்பகுதிக்குள் இல.69, வால்ஸ் ஒழுங்கை, கொழும்பு 15 இல் அமையப்பெற்றுள்ள வளாகத்தின் உரிமையினை CPC எனும் விற்பனை தாரர் LMSL எனும் பெறுனருக்கு கைமாற்றிட ஒப்புக்கொள்கிறார்"*

*மேற்கூறப்பட்ட வாசகமானது இலங்கை அரசு, எந்தவிதத்திலும் 8A.2R.21.44P எனும் பரப்பிலான நிலத்தினை 'மதிப்பீட்டிற்கு விலக்களித்து' LMSL இன் கொள்வனவாளரின் 'அநீதியான மேம்பாட்டிற்காக' பரிமாற்றம் செய்ய இடமளிக்கவில்லை.*

*பொ.நி.சீ.ஆ. தலைவர் P.B.ஜயசுந்தர கேள்விப்பத்திர முற்கூட்டத்திலே பின்வருமாறு உறுதிப்படுத்தினார் " நிலம் - முடிவுதிகதியிலிருந்து ஒரு வருட காலப்பகுதிக்குள் பொ.நி.சீ.ஆ 2002, மே 07 இற்குள் LMSL இனால் செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவுகள் உட்பட பரிமாற்றத்தின் நிபந்தனைகள் என்பனவற்றினை திருப்பிச்செலுத்தியிருத்தல் வேண்டும்." (கூட்ட அறிக்கையின் 5 (b) இன் படி )*

*16. மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் P.வீரஹந்தி 3.11.2004 இல் இந்நிலப்பரப்பினை LMSL இற்கு பரிமாற்றம் செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டார். தொடர்ச்சியாக 11.1.2005 திகதியிடப்பட்ட கடிதத்தில் காணிகள் அமைச்சின் செயலாளர் W.M.ஜயதிலக்க LMSL இன் கொள்வனவு பெறுமதி 1,199,362,500/- எனும் தொகையினை பெற்றுக்கொண்டபின் அதனை கைமாற்றம் செய்வதனை ஜனாதிபதி அவர்கள் அனுமதித்துள்ளார் என்பதனை ஜனாதிபதியின் செயலாளர் காணிகள் ஆணையாளர் நாயகத்திடம் அறிவித்துள்ளார் என்பதனை தெரியப்படுத்தியிருந்தார்*

*17. 19.1.2005 திகதியிடப்பட்ட கொடுப்பனவு பத்திரமானது LMSM இடமிருந்து அரசாங்கமானது காணியின் பெறுமதி ரூபா. 1,199,362,500/- இணைப் பெற்றுக்கொண்டதாக தெரிவித்திருந்த பொழுதும் திறைசேரி பரிமாற்றங்கள் திணைக்களத்தின் நிர்வாக செயலாளர் W.M. பந்துசேன, தனது 18.8.2006 திகதியிடப்பட்ட கடிதத்தில் இக்காணி பரிமாற்றத்திற்காக அரசாங்கம் எந்தவொரு பணத்தொகையினையும் பெறவில்லை என்பதனை பொ.நி.சீ.ஆ. தலைவர் P.B.ஜெயசுந்தரவிற்கு, அவர் கொடுப்பனவு பாத்திரத்தில் குறிப்பிட்ட தொகையினை அரசு பெற்றுக்கொண்டதாய் உறுதிப்படுத்தும்படி கேட்டிருந்த கடிதத்திற்கு பதிலாக அனுப்பிய கடிதத்தில் தெரிவித்திருந்தார்*

*LMSL இன் 31.3.2005 இல் நிறைவுபெற்ற நிதியாண்டின் கணக்கறிக்கையில் LMSL இக்காணி பரிமாற்றத்திற்காக அரசாங்கத்திற்கு கொடுப்பனவாக ரூபா. 1,199,362,500/- இனை செலுத்தியதாக காட்டப்படவில்லை*

*உண்மையில் ரூபா.1,199,362,500 என்பது ஆகஸ்ட் 2002 இல் ஜான் கீல்ஸ் நிறுவனமானது இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனத்திற்கு LMSL இன் 90 % பங்குகளை கொள்வனவு செய்தமைக்காக திறைசேரியின் செயலாளருக்கு செலுத்தும்படியாக செலுத்திய தொகையாகும்.இது எந்தவிதத்திலும் 2005 ஜனவரியில் திறைசேரியின் செயலாளருக்கு LMSL செலுத்தியதாக கருத்தில் கொள்ளப்பட இயலாது*

18. எனவே இவ் அரச காணியானது LMSL இற்கு "எந்தவொரு கணிக்கத்தக்கபெருமானமுமின்றி"ஜனவரி 2005 இல் "தீர்மானிக்கப்பட்ட கொடுப்பனவான" ரூபாய் 1,199,362,500/- இற்கு பரிமாற்றப்பட தீர்மானிக்கப்பட்டிருந்தது

இதன்படி கொடுப்பனவு பத்திரமானது ஓர் " மோசடியான ஆவணமும்" கற்பனையுமே ஆகும். இதில் LMSL இனால் எந்தவொரு கொடுப்பனவோ அரசாங்கத்தினால் எந்தவொரு வருமதி பெற்றுக்கொள்ளலோ கொடுப்பனவு

பாத்திரத்தில் புளூமெண்டலில் அமைந்துள்ள 8 A,2R,21.44P பரப்பிலான காணியின் பரிமாற்றத்திற்காக மேற்கொள்ளப்படவில்லை. எனவே இக்காணியின் சட்ட ரீதியான முறையில் பரிமாற்றம் இடம்பெறவில்லை. இக் கொடுப்பனவு பத்திரத்தினைப்போலவே இப்பரிமாற்றமும் மோசடியானதும், கற்பனையுமே ஆகும்.

19. பிரதான மதிப்பீட்டாளராலும் தொழில்சார் தனியார் மதிப்பீட்டாளராலும் இக்காணியின் சந்தைப்பெறுமதியானது ஆகஸ்ட் 2002 இல் வெளிப்படுத்தப்படும். அதாவது பங்கு விற்பனை மற்றும் கொள்வனவு ஒப்பந்தம் நிறைவேற்றப்படும் போது.

20. 2002 ஜூன் இல் LMSL இற்காக DFCC வங்கியினால் வருமானத்தினடிப்படையிலான 2002/03 நிதியாண்டுக்கான கணிப்பீடாக 8 இன் மடங்கில் ரூபா.1,405 மில்லியனும் 10 இன் மடங்கில் ரூபா.1,767 மில்லியனுமாக கணிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் LMSL இன் அடுத்தடுத்த நிதியாண்டுகளில் வரிக்கு பின்னரான நிகர இலாபமானது பின்வருமாறு காணப்பட்டது .

| | ரூ |
|---|---|
| நிதியாண்டு 2002/03 | 402,733 |
| நிதியாண்டு 2003/04 | 235,876 |
| நிதியாண்டு 2004/05 | 574,062 |
| நிதியாண்டு 2005/06 | 1,089,393 |

மேற்குறிப்பிட்ட நிகர இலாபமானது ஜான் கீல்ஸ் நிறுவனம் யாதேனும் கொடுப்பனவுகள் அல்லது செலவுகளை LMSL இடமிருந்து அறவிட்டதன் பின்னரான பெறுமதியாகும்


21. இப்பரிமாற்றமானது அமைச்சரவையின் எந்தவொரு அனுமதியுமில்லாது அப்பட்டமாக சில பிள்ளைகளுடன் மேற்கொள்ளப்பட்டது, இது அரசாங்கத்திற்கு நட்டத்தினையும் கேட்டினையும் ஏற்படுத்தியதோடு கேள்விக்குரிய முறையில் "ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதும் " ஆரம்பம் முதல் சட்ட விரோதமாகவும் செல்லுபடியற்றதாகவும் இருப்பதனை வெளிப்படுத்துகிறது.

இதனை தொடர்ந்த உச்ச நீதிமன்றின் தீர்ப்பானது,முன்னாள் நிதியமைச்சின் செயலாளரான PB ஜயசுந்தர மற்றும் வரையறுக்கப்பட்ட ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தலைவர் சுசந்த ரத்நாயக்க ஆகியோரை கடுமையாக கண்டித்ததுடன், தீர்ப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தவாறு அவர்களுக்கு எதிராக பல்வேறு குற்றசாட்டுகளை முன்வைத்திருந்தது. வெளிப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் திறந்த பொருளாதாரத்திற்கும் ஜனநாயகத்திற்கும் ஆபத்தானவையாகும்.

இதன் பின்னர், உச்ச நீதிமன்றானது,நீதியமைச்சின் செயலாளரை,ரூபா 500,000 தினை அரசாங்கத்திற்கு இழப்பீடாக கொடுக்கவேண்டும் எனவும், நிதியமைச்சு மற்றும் திறைசேரியின் செயலாளர் ஆகிய பதவிகளில் இருந்தும் பொது ஊழியராக அவர் வகிக்கும் அனைத்து பதவிகளில் இருந்தும் உடனடியாக விலக வேண்டும் எனவும், எந்தவொரு அரச சேவையிலும் அவர் பதவி வகிக்க கூடாது எனவும் உத்தரவிட்டது. இந்த உச்ச நீதிமன்றின் தீர்ப்பினை உறுதி செய்யும் முகமாக, அவர் தான் நேரடியாகவோ மறைமுகமாகவோ எந்தவொரு அரச பதவியையும் வகிக்கமாட்டேன் என சத்திய கடதாசி மூலம் உறுதி செய்தார் .

அதிர்ச்சிகரமாக, வெளிப்படுத்தப்பட்ட உண்மை என்னவெனில், ஜனநாயக தலைவர்கள்,பெருநிறுவனத்தினரும், தொழிற் துறைசார்ந்தோரும் ஊழல் மோசடியை அனுமதிப்பது மட்டுமல்லாது, அரச சொத்துக்களை கொள்ளையடித்து சூறையாடுவதனையும் அனுமதிப்பதோடு, பொதுமக்கள் தமது நீதி அதிகாரத்தை பயன்படுவதற்கும் தடையாக இருக்கிறார்கள். மறுபுறம் இப்படியான பெருநிறுவன தலைவர்களை வெட்கமின்றி பாரதூரமான முறையில், வர்த்தக அமைப்பும் ஏனையோரும் அங்கீகாரம் அளிக்கிறார்கள்.

மேலும் அதிர்ச்சி தரும் விடயமாக ஜோன் கீல்ஸ் நிறுவனமானது ஐ.நா.வின் உள்ளடக்கத்தில் இருந்த கம்பனியாக இருந்ததுடன், தாம் கட்டிக் காப்பதாக உறுதி பூண்ட மோசடிக்கு எதிரான ஐ.நா. மாநாட்டின் சரத்துக்களுக்கு முரணாக நடந்து கொண்டதுடமையானது, அரசியல் சமூக யதார்த்தத்தை காட்டியதுடன், அது வெறும் கற்பனையாக காட்டப்பட்டதுடன்,ஜோன் கீல்ஸ் நிறுவனமானது பாதுகாப்பு மற்றும் பணமாற்று ஆணைக்குழுவின் கண்காணிப்பின் கீழிருந்த பட்டியலிடப்பட்ட கம்பனியாக இருந்தது.



Daily Mirror

# A Tribute to Living Our Values

John Keells Holdings is Ranked No. 1 for the 3rd Consecutive Year as Sri Lanka's Most Respected Entity

NO. 1 IN VISION

NO. 1 IN HONESTY

NO. 1 IN QUALITY CONSCIOUSNESS

NO. 1 IN MANAGEMENT PROFILE

NO. 1 IN WORK ENVIRONMENT

NO. 1 IN CSR

NO. 1 IN NATIONAL-MINDEDNESS


We are once again honoured to be named the most respected entity in Sri Lanka; chosen from among local and multinational corporate bodies. A ranking compiled by LMD in 2007 based on research conducted by The Nielsen Company amongst the business community, names us as the benchmark of the above categories. We have been rated No. 1 since the inception of these rankings and improved our overall scores each year. Recognition made possible by the contributions of all our stakeholders.

John Keells Group

A Group with interests in Transportation, Leisure, Property, Consumer Foods & Retail, Financial Services and Information Technology.

மேலும் இப்புத்தகத்தில் வெட்கமில்லாமல் காட்டப்பட்டுள்ள மற்றொரு உண்மை என்னவெனில்,நல்லாட்சியும், வெளிப்படைத்தன்மையும் மீறப்பட்டுள்ளதுடன்,சட்ட அமுலாக்கத்தை பலம் பொருந்திய அரச ஊழியர்களும், பெருநிறுவனங்களில் உயர் மட்டத்தில் இருந்தவர்களும் கணக்கிற்கொள்ளாமற் போனமையானது,அரசியலமைப்பின் ஆணையின் பிரகாரம் தேசிய மற்றும் பொது நலனை கருத்திற்கொண்டு அரச சொத்துக்களை கொள்ளையடித்து சூறையாடுவதனையும் அலட்சியம் செய்திருந்தார்கள் என்பதாகும்.

அதற்கு பின்னர் பிரதம நீதியரசர் சரத் N சில்வா ஓய்வு பெற்றதை தொடர்ந்து, புதிய பிரதம நீதியரசர் அசோக டி சில்வா தலைமையில் நீதியரசர்களான ஷிராணி பண்டாரநாயக்க,ஷிராணி திலகவர்தன,DJ De S பாலபட்டபெந்தி, S .மர்சூப், K .ஸ்ரீபவன் PA ரத்னாயக்க ஆகியோர் அடங்கிய 7வர் கொண்ட குழாமானது பிறரின் உதவிக்காக, அரசியல் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதி அவர்களுக்கு அவர் தெரிவு செய்கிற எவரையேனும் பதவியமர்த்துவதற்க்கான வரையறையற்ற அதிகாரம் உள்ளது என்ற அடிப்படியில், மீண்டும் P.B. ஜயசுந்தர அவர்கள் மீண்டும் பதவியேற்பதற்கு அனுமதி அளித்தது. இதனால் மீண்டுமொருமுறை P.B. ஜயசுந்தர அவர்கள் நிதியமைச்சின் செயலாளராக பதவியேற்றார். ஆதாரம்



"A"

ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி செயலகம்
THE PRESIDENTIAL SECRETARIAT

My No.
Your No.
Colombo 1.

July 31, 2008


Dr P B Jayasundera
Secretary
Ministry of Finance & Planning

I refer to your letter dated July 25, 2008, addressed to His Excellency the President.

His Excellency the President appreciates your concerns, but requires you to continue to serve as Secretary to the Ministry of Finance & Planning, until a suitable replacement is found.

Lalith Weeratunga
Secretary to the President

E-mail – prsec@presidentsoffice.lk



"B"

ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி செயலகம்
THE PRESIDENTIAL SECRETARIAT

My No.
Your No.
Colombo 1.

English Translation

7th September 2008

Dr. P.B. Jayasundera
Secretary
Ministry of Finance & Planning

Sir,

Releasing from Post

This refers to your Letter dated 25th July 2008 addressed to His Excellency the President on the above matter.

H.E. the President had directed me to inform you that the request made by you to release you from the post of Secretary Ministry of Finance & Planning and from the post of Secretary to the Treasury has been accepted to be effective from 17th September 2008.

I convey my gratitude for the assistance rendered by you in the performance of duties.

Yours faithfully,

Lalith Weeratunga
Secretary to the President

E-mail – prsec@presidentsoffice.lk

Cc:-

1. Secretary to the Prime Minister
2. Secretary to the Cabinet of Ministers
3. Secretary, Ministry of Finance & Planning
4. Secretary, Ministry of Public Administration & Internal Affairs
5. Auditor General
6. Secretary, Public Service Commission

இதன் பிரதிபலனாக, தான் முதலில் உச்ச நீதிமன்றிக்கு நான் எந்தவொரு அரச பதவியையும் நேரடியாகவோ,மறைமுகமாகவோ ஏற்கமாட்டேன் என கொடுத்த சத்திய கடதாசியிலிருந்து தன்னை விலக்குமாறு உச்ச நீதிமன்றில் வேண்டுதல் செய்து, தான் கொடுத்த சத்திய கடதாசியில் இருந்த காரணங்கள் தொடர்பில் தன்னை விலக்குமாறும் ஒரு மனுவை தாக்கல் செய்தார்.

உச்ச நீதிமன்றின் முன் அனுமதியின்றி P.B. ஜயசுந்தர அவர்கள் தனது முதலாவது சத்திய கடதாசியில் நொத்தாரிஸ் ஒருவரின் கையொப்பம் இல்லையென்பதை வெளிக்காட்டி மேலும் ஒரு மனுவையும் சத்திய கடதாசியையும் தாக்கல் செய்தார். ஆதாரம்

33. I respectfully pray that Your Lordships Court be pleased to grant the relief prayed for in the Amended Petition.

Read over and explained to the Affirmant abovenamed and he having understood the contents thereof placed his signature before me on this 21st day of July 2009 at Colombo

**BEFORE ME**

**JUSTICE OF PEACE/
COMMISSIONER FOR OATHS**

அதற்கு பின் PB ஜயசுந்தர அவர்கள் மீண்டுமொருமுறை உச்ச நீதிமன்றின் முன் அனுமதி இன்றி தன்னுடைய மனுவைஇரண்டாவது முறை திருத்தம் செய்து இரண்டாவது சத்திய கடதாசியை முன்வைத்தார். இது உச்ச நீதிமன்றின் விதிமுறைகளை மீறும் ஒரு செயலாக இருந்தாலும், உச்ச நீதிமன்றம் தன்னுடைய விதிமுறை மீறல்களை நிராகரித்து இந்த திருத்தப்பட்ட மனுவை விசாரிக்க முன்வந்தது.

உச்ச நீதிமன்றம் தனது விதிமுறைகளை மீறிய மனுவை அனுமதித்திருந்த அதேவேளை, நூலாசிரியர் பொதுநலன் சார்பில் உச்ச நீதிமன்றில் முரண்பாடுகள் மிக்க எண்ணெய் இழப்புக்காப்பு ஒப்பந்தம் தொடர்பிலான வழக்கின் மனுவை உச்ச நீதிமன்ற பதிவாளரின் அனுமதியோடு திருத்தம் செய்து சமர்ப்பித்திருந்தார்.எனினும், மேற்குறித்த உச்ச நீதிமன்றின் விதிமுறைகளை மீறிய PB ஜெயசுந்தரவின் மனுவிற்கு அனுமதி கொடுத்திருந்த நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க அவர்கள் நூலாசிரியர் தன்னுடைய மனுவில் திருத்தம் செய்வதாயின் நீதிமன்றின் அனுமதியை பெற்றிருக்க வேண்டும் என நூலாசிரியருக்கு அறிவித்ததுடன், அவ்வாறு செய்யுமாறு நூலாசிரியருக்கு கூறி வழக்கினை விசாரிக்க வேறொரு திகதிக்கு ஒத்தி வைத்தார். பிறர்சார்பான/இழப்புக்காப்பு ஒப்பந்தங்கள் சிட்டி வங்கி,ஸ்டாண்டர்ட் சார்ட்டர் வங்கி,டொய்ஷ் வங்கி மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் - சந்தேகத்திற்குரியதும் சட்டவிரோதமானதும்

PB ஜெயசுந்தரவின் மனுவில் காணப்பட்ட விண்ணப்பங்கள் பின்வருமாறு:

> (a ) 08.10.2008ல் கொடுக்கப்பட்ட தீர்ப்பை விளக்கவும் ஏனெனில் அது தற்போதைய மனுதாரரினால் கொடுக்கப்பட்ட சத்திய கடதாசியில் உள்ள "எந்தவொரு அரச நிறுவனங்களிலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பதவி வகிக்க மாட்டேன் என்பதோடு எந்தவொரு விதத்திலும் நிர்வாக ரீதியாகவோ நடத்துதல் தொடர்பாகவோ முடிவெடுக்க முனைய மாட்டேன்" என்ற குறிப்போடு தொடர்புபட்டு உள்ளது.
>
> (b) 16.10.2008 அன்று தற்போதைய மனுதாரரினால் தாக்கல் செய்யப்பட்ட சத்திய கடதாசியில் இருக்கும் 13 பந்தியிலிருந்து மனுதாரரை விடுவிக்கும் படி தற்போதைய மனுதாரரினால் நீதிமன்றில் தங்கள் கர்த்தாக்கள் முன்னிலையில் D என்று குறிக்கப்பட்டு உள்ள தீர்ப்பினை விலக்க வேண்டும்
>
> (c) மேலும் கர்த்தாக்கள் சரியானதும் நேர்மையானதும் என கருதும் வெறும் விலக்குகளையும் அளிக்க வேண்டும்

சட்டத் தரணி வாசுதேவ நாணயக்காரவிற்காக ஆஜராகிய சட்டத்தரணி நூலாசிரியரின் உதவியோடு மேற்குறித்த விண்ணப்பங்களை கடுமையாக எதிர்த்தமையினால், உச்ச நீதிமன்றமானது தாங்கள் (a),(b) இல் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களின் அடிப்படையில் விலக்குகளை கொடுக்க முடியாது என்கிற தீர்ப்பை எடுக்க உந்தப்பட்டது.

உச்ச நீதிமன்ற விதிகளின் பிரகாரம் எழுத்து மூல சமர்ப்பணங்களை கொடுத்திருக்கும் ஒரு கட்சியினருக்கே வாய்மூல சமர்ப்பணம் செய்ய அனுமதியளிக்கப்படும். நூலாசிரியர் மாத்திரமே நீண்ட எழுத்துமூல சமர்ப்பணங்களை மேற்கொண்டிருந்த அதேவேளை P.B. ஜயசுந்தரவின் சட்டத்தரணி எவ்வித எழுத்துமூல சமர்ப்பணங்களையும் செய்திருக்கவில்லை. எவ்வாறெனினும் உச்ச நீதிமன்றமானது, குறித்த சட்டத்தரணிக்கு வாய்மூல அறிக்கை சமர்ப்பிக்க எல்லையற்ற காலத்தை வழங்கியது.

*மறுபுறம், உச்ச நீதிமன்ற விதிகளின் பிரகாரம் எழுத்துமூல சமர்ப்பணங்களை செய்திருந்த நூலாசிரியருக்கு வாய்மூல சமர்ப்பணங்களை செய்ய நியாயபூர்வமான அதிகாரம் இருந்தபோதும், பிரதம நீதியரசர் அசோக டி சில்வா அவர்கள் நூலாசிரியரின் வாய்மூல சமர்ப்பணத்தை நேரம் போதாத காரணத்தால் 10நிமிடங்களுக்கு மட்டுப்படுத்துமாறு வேண்டிக்கொண்ட அதேவேளை, எழுவர் அடங்கிய நீதிபதிகள் குழுவானது முழு நாளும் P.B. ஜயசுந்தரவின் சட்டத்தரணியின் வாய்மூல சமர்ப்பணத்தை செவிமடுத்திருந்தது.*


*இந்த பின்னணியில் சிரேஷ்ட நீதியரசரான ஷிராணி பண்டாரநாயக்க அவர்கள் இவ்வழக்கில் அதீத அக்கறை காட்டி எப்படியாவது நிவாரணம் கொடுக்கப்பட வேண்டும் எனவும், அந்த நிவாரணமானது வேண்டல் "(c) மேலும் கர்த்தாக்கள் சரியானதும் நேர்மையானதும் என கருதும் வெறும் விலக்குகளையும் அளிக்க வேண்டும் " அடிப்படையில் அமையலாம் எனவும் அதில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்கள் PB ஜயசுந்தரவை மீண்டும் நிதியமைச்சின் செயலாளராக நியமிப்பதில் அரசியல் சாசன அடிப்படையில் நிறுத்த முடியாது எனவும் கூறினார். இங்கே பிரதான வேண்டுதல்களுக்கே நிவாரணம் அளிக்க முடியாத நிலையில் எவ்வாறு வேறே நிவாரணங்கள் கொடுக்க முடியும் என்ற கேள்வி எழுகின்றது.*

*எவ்வாறெனினும் அதற்கு சம்மதிக்காத துணிச்சலான நீதியரசர் ஷிராணி திலகவர்தன அவர்கள், PB ஜயசுந்தரவின் திருத்தப்பட்ட மனுவானது உச்ச நீதிமன்றின் அனுமதி இல்லாமலும் முறையான சத்திய கடதாசியை கொண்டிராததினாலும் அவருடைய மனுவானது முதற்கணத்திலேயே நிராகரிக்கப்படவேண்டும் எனவும் சுட்டிக் காட்டியதோடு, ஜனாதிபதி அரசியலமைப்பிற்கு உட்பட்டு செயற்பட வேண்டும் எனவும் அவர் வரையறை அற்ற அதிகாரங்களை அனுபவிக்க முடியாது எனவும், அவர் பொதுமக்களின் ஜனநாயகத்திற்கும் அறநெறிக்கும் மதிப்பளிக்க வேண்டும் எனவும் அரசியல் யாப்பின் பிரகாரம் அரசாங்கத்தின் அனைத்து உறுப்புக்களும் சட்டவாக்கில் நடக்க கட்டுப்பட்டுள்ளன எனவும் கூறினார்.*

*எவ்வாறெனினும், அதிர்ச்சிகரமாக கணனியில் செய்யப்பட்ட எழுத்துரு மற்றும் எழுதட்டுக்களின் அளவு மாறாட்டங்களின் நிமித்தம் மேற்குறித்த ஒரேயொரு வேறுபட்ட நீதியரசர் ஷிராணி திலகவர்தனவின் 2 பக்கங்கள் கொண்ட தீர்ப்பு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதை நூலாசிரியர் கண்டுபிடித்தார். இது எழுத்துருக்களை பெரிய அளவிற்கு மாற்றம் செய்வது மூலம் செய்யப்பட்டுள்ளது ஆதாரம், Century 'Century Gothic Font' இலான முதல் 15 பக்கங்கள், 17 பக்கங்களாக்கப்பட்டதுடன், 16ம் 17ம் பக்கங்களில் 'Century Gothic Font' எனும் பெரிய எழுத்துரு நீக்கப்பட்டிருந்தது.*

*அதனைத்தொடர்ந்து முதல் 14 பக்கங்ளில் காணப்பட்ட 'Century Gothic Font' எனும் எழுத்துருவானது 7ம் தாளின் இரு பக்கங்களிலும் பிரதிசெய்யப்பட்டு (Photocopy) 8ம் தாளில் 15ம் பக்கத்தின் 'Century Gothic Font' எனும் பெரிய எழுத்திலான உள்ளடக்கங்கள் பிரதி முன் பக்கத்திலும் 8ம் தாளின் பின்புறத்தில் 16ம் பக்கத்தின் "Calibri Font" எனும் சிறிய எழுத்திலான உள்ளடக்கம் பிரதிசெய்யப்பட்டிருந்தது. இது நீதியரசர் ஷிரானி திலகவர்தனவின் கையொப்பத்தினை தாளின் முடிவில் உள்ளடக்கியதுடன் '15ம் பக்கம்' என்பதும் முழுமையான பந்தியின் இறுதியில் பிரதிசெய்யப்பட்டிருந்தது. 16ம் பக்கம் முற்றுப்பெறாத ஓர் பந்தியுடன் ஆரம்பமாகிறது*

*ஆதாரம்*



Finally can the Court on its own volition free him from this undertaking merely because the President has expressed a concern to have him back? In considering this I am mindful of the fact that despite affidavits being tendered to Court, apologies being made to Court and the findings of the judgment, the Petitioner has *falsely made contrary representations* to the Secretary to the President in letters (marked "A") dated 25th July 2008 and (marked "F") dated 3rd June 2009. In his letters to the Secretary he contradicts the contents of his own affidavit, the submissions of his own counsel made at the time in Court and which is recorded in contemporaneous proceedings, and, in that sense, appears to be uncertain and confused. Did the Petitioner, in his affidavit, mean what he said or has he fabricated his stance? To say the least his word, in its varied contradictions, appears fickle.

13 OCT 2009

15

leads to a halt in the growth of the other. The promptings of a kind compassionate heart or sympathetic urgings must necessarily be bridled in dealing with the resources of the State, for it ultimately belongs to the People and must be in the custodianship of honest, disciplined, hardworking and effective public officers.

I accordingly dismiss the amended petition. No Costs.

JUDGE OF THE SUPREME COURT

13 OCT 2009

SRI LANKA

16

*இந்த மாறாட்டங்களினால் ஒரேயொரு மாறுபட்ட நீதியரசர் ஷிராணி திலகவர்தனவின் 2 பக்க தீர்ப்பானது உள்ளடக்கப்படாமல் ஒக்டோபர் 13ம் திகதி 2009ல் உச்ச நீதிமன்றின் பதிவுகளில் வழங்கப்பட்டபோது அந்த பதிவுகளின் அடிப்படையில் அக்டோபர் 14ம் திகதி 2009ல் ஊடகங்களில் பரந்தளவில் பிரசுரிக்கப்பட்டிருந்ததோடு, பொதுநலன் கருதி பிரசுரமாகியிருக்கவேண்டிய நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியின் அதிகாரங்களின் அரசியல் சாசன கட்டுப்பாடுகள் தொடர்பிலான மிக*

முக்கிய உள்ளடக்கங்கள் ஊடகங்களில் பிரசுரமாகியிருக்கவில்லை என்பதோடு, இந்த மாறாட்டங்களினாலே ஒரேயொரு மாறுபட்ட தீர்ப்பினது முக்கியமான சார்பான உள்ளடக்கங்கள் ஊடகங்களில் வருவதையும் முடக்கியிருந்தது

மேற்குறித்த வழக்கில் குற்றப் புலனாய்வு திணைக்களம், பொலிஸ் மா அதிபர், ஊழல் மற்றும் மோசடி தொடர்பில் ஆராயும் ஆணைக்குழு,பாதுகாப்பு பணமாற்று ஆணைக்குழு என்பன பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டு இருந்ததோடு,மேற்குறித்த தீர்ப்பில் அரச சொத்துக்கள் மீது பாரிய மோசடி இடம்பெற்று இருப்பதை வெளிக்காட்டி மேலும் பல முறைப்பாடுகளும் செய்யப்பட்டு உச்ச நீதிமன்றானது குறித்த பிரதிவாதிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்க ஆணை கொடுத்திருந்தபோதும், இந்த அமைப்புக்கள் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் பாராமுகமாக கொள்கையை கடைப்பிடித்தமையானது சட்ட அமுலாக்கத்தின் நிலைநாட்டலை கேலிக்குரிய விடயமாக்கிற்று.

மேற்குறித்தவை மேலும் பல்வேறு விடயங்கள் உள்ளடங்கலான 1982ம் ஆண்டின் 12ம் இலக்க பொது சொத்து சட்டத்திதிற்கெதிரான குற்றங்கள் தொடர்பில் உடனடி நடவடிக்கைகளை வேண்டியிருந்தது.

1. போதுச்சொத்திற்கு குழப்பம் விளைவித்தல்
2. பொதுச் சொத்தை களவாடல்
3. பொதுச்சொத்தை சூறையாடல்
4. பொதுச் சொத்து மீதான பிழையான ஒதுக்கீடு அல்லது குற்றவியல் நம்பிக்கை மீறல்
5. பொதுச்சொத்து மீதான மோசடி, மாறாட்டம், திரிபுபடுதல்
6. மேற்குறித்த குற்றங்களை செய்ய முனைதல்

எவ்வாறெனினும் அப்படியான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.